ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2006/41 - 2017 පෙබරවාරි මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.02.16

*2006/41 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்*

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 06 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான 2016.08.24 ஆந் திகதிய 1981/46 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உருளைக் கிழங்கு (எச். எஸ். தலைப்பு இல. 0701.90) 2016.08.19 ஆந் திகதிய 1980/37 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பெரிய வெங்காயம் (எச். எஸ். தலைப்பு இல. 0703.10.20 ) மற்றும் 2016.09.29 ஆந் திகதிய 1986/55 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பருப்பு (எச். எஸ். தலைப்பு இல. 0713.40.11, 0713.40.12, 0713.40.21 மற்றும் 0713.40.22) சம்பந்தமான உத்தரவு 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.*

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2017, பெப்ரவரி 16.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 1. | 07.01 | 0701.90 | பிற உருளைக் கிழங்கு | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 40.00 |
| 2. | 07.03 | 0703.10.20 | பெரிய வெங்காயம் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 40.00 |
| 3. | 07.13 | 0713.40.11 | மைசூர் பருப்பு (சிவப்பு பருப்புகள்) முழுமையானவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 10.00 |
| | | 0713.40.12 | மைசூர் பருப்பு (சிவப்பு பருப்புகள்) பிளக்கப்பட்டவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 15.00 |
| | | 0713.40.21 | மஞ்சள் பருப்புகள் முழுமையானவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 10.00 |
| | | 0713.40.22 | மஞ்சள் பருப்புகள் பிளக்கப்பட்டவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 15.00 |

3- 306

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.